நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, மேட்டூர்.

## CC. No. 39/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வைத்தியலிங்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சாமிகண்ணு |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | PW 4 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 29 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.35 A.M

1. நான் தற்போது வீரக்கல்புதூரில் குடியிருந்து வருகிறேன். ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து தற்போது வீட்டில் தான் உள்ளேன். இந்த வழக்கின் எதிரி குமரவேலை எனக்கு தெரியும். அவர் என்னுடைய உடன் பிறந்த தம்பி ஆவார். கடந்த 12.01.2025–ஆம் தேதி மாலை 04.00 மணி சுமாருக்கு எனது

தம்பி குமரவேல் சொத்தை பிரித்து கொடுக்க கேட்டு என்னிடம் வாய்மொழியாக தகராறு செய்தார்.

2. அதிகமாக பேசியதால் கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த பிறகு, என்னுடன் காவலர் ஒருவர் என்னுடைய வீட்டிற்கு வந்தார். ஆனால் அந்த சமயத்தில் எனது தம்பி அங்கு இல்லை. என்னுடைய தம்பியின் செல்போன் எண்ணை வாங்கி காவலர் போன் செய்தார். அதற்கு எனது தம்பி எனது அம்மா வீட்டில் இருப்பதாக சொன்னார்.

3. அதன் பிறகு காவலர் நேராக எனது அம்மா வீட்டிற்கு சென்றார். அங்கு சென்றபோது எனது தம்பி காவலரிடம் தகராறு செய்ததாக சொன்னார்கள். அதன் பிறகு ஜீப் வந்து எனது தம்பியை அழைத்து செல்லும்போது தான் எனக்கு தெரியவந்தது. அதன் பிறகு ரிமான்டு செய்ததாக சொன்னார்கள். நான் கொடுத்த புகாரை குடும்ப பிரச்சனை என்பதால் எனது தம்பி வழக்கு ரத்து செய்யகோரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் நான் ஆஜர் ஆகி சமாதானம் செய்து வழக்கை முடித்துகொண்டோம்.

4. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

5. காவலர் எனது அம்மா வீட்டிற்கு சென்றபிறகு, என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் எனது தம்பி மீது கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யபட்ட வழக்கில் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து இருப்பதாகவும் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.50 A.M

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி**

**என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**

நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, மேட்டூர்.

**CC. No. 39/2025**

**P.W.5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேவக்கண்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 29 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.50 A.M

1. நான் தற்போது அயோத்தியபட்டினத்தில் குடியிருந்த வெல்டிங் பொறியாளராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி எனது சித்தப்பா ஆவார். கடந்த 12.01.2025–ஆம் தேதி மாலை 04.00 மணி சுமாருக்கு எனது சித்தப்பா

குமரவேல் சொத்தை பிரித்து கொடுக்க கேட்டு எனது அப்பாவிடம் வாய்மொழியாக தகராறு செய்தார்.

2. அதிகமாக பேசியதால் கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். புகார் கொடுத்த பிறகு, எங்களுடன் காவலர் ஒருவர் என்னுடைய வீட்டிற்கு வந்தார். ஆனால் அந்த சமயத்தில் எனது சித்தப்பா அங்கு இல்லை. என்னுடைய சித்தப்பாவின் செல்போன் எண்ணை வாங்கி காவலர் போன் செய்தார். அதற்கு எனது சித்தப்பா எனது அம்மா வீட்டில் இருப்பதாக சொன்னார்.

3. அதன் பிறகு காவலர் நேராக எனது பாட்டி வீட்டிற்கு சென்றார். அங்கு சென்றபோது எனது சித்தப்பா காவலரிடம் தகராறு செய்ததாக சொன்னார்கள். அதன் பிறகு ஜீப் வந்து எனது சித்தப்பாவை அழைத்து செல்லும்போது தான் எனக்கு தெரியவந்தது. அதன் பிறகு ரிமான்டு செய்ததாக சொன்னார்கள். எனது அப்பா கொடுத்த புகாரை குடும்ப பிரச்சனை என்பதால் எனது சித்தப்பா வழக்கு ரத்து செய்யகோரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் எனது அப்பா ஆஜர் ஆகி சமாதானம் செய்து வழக்கை முடித்துகொண்டார். போலீசார் என்னை இந்த வழக்கு சமந்தமாக என்னை விசாரிக்க வில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. காவலர் எனது பாட்டி வீட்டிற்கு சென்றபிறகு, என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து இருப்பதாகவும் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான்

மறுவிசாரணை இல்லை

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.00 A.M

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, மேட்டூர்.

**CC. No. 39/2025**

**P.W.6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தமிழரசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 29 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15 P.M

1. நான் தற்போது குஞ்சாண்டியூரில் குடியிருந்து டிரைவராக வேலை செய்கிறேன். நான் ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்வதால் ஒரு நோயாளியை சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு இரயில்வே கேட் அருகில் கடந்த 12.01.2025 ம் தேதி

இரவு 08.30 மணி சுமாருக்கு நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது போலீசாருக்கும் சிலருக்கும் சண்டை என்று கேள்விப்பட்டேன்.

2. ஒரு காவலர் சென்று ஏதோ ஒன்றை தட்டச்சு செய்துக்கொண்டுவந்தார். பாப்பாத்தி என்பவரின் வீட்டை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார். அதில் நானும் அருண்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. கம்யூட்டர் மூலமாக தட்டச்சு செய்துக்கொண்டுவந்தார். என் முன்னால் மேற்படி ஆவணத்தை தயார் செய்யவில்லை. ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த தாளில் கையெழுத்து போலீசார் வாங்கினார்கள். சம்பவத்தை பற்றி நான் காவல் துறை விசாரணையில் எதுவும் சொல்லவில்லை.

2. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.25 P.M

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**

நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, மேட்டூர்.

## CC. No. 39/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 29 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.26 P.M

1. நான் தற்போது கோனூரில் குடியிருந்து ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்கிறேன். கோம்புரான் காட்டில் அடிதடி என்று எனக்கு போன் செய்து எனக்கு தகவல் சொன்னார்கள். நான் செல்வதற்குள் இருச்சக்கர

வாகனத்திலேயே அடிப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அதனால் நான் திரும்பி வந்துவிட்டேன்.

2. அதன்பிறகு ஒருவாரம் கழித்து கார் ஸ்டேன்டுக்கு வந்து காவல் உதவி ஆய்வாளர் வரைபடத்தையும், பார்வை மகசரையும் காட்டி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கிச்சென்றார். என்னுடன் தமிழரசன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.**